2020 பிப்ரவரி 20]

61—

கலைக் கல்லூரி

***3995—திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னம் தொகுதி, செந்துறை வட்டம், செந்துறையில் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், குன்னம் தொகுதியைச் சார்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், அவர்களுடைய தொகுதியைச் சார்ந்த செந்துறையில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்க அரசு ஆவன செய்யுமா எனக் கோரியுள்ளார். இதுகுறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன் உடலிலுள்ள நோய் தன் ஆயுளைக் குறைத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்தும் தன்னைப் பற்றி தன்னலம் கருதாமல், தன்னை நம்பியிருக்கக்கூடிய தமிழக மக்களின் நலனையே கருத்திற்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மண்ணில் நல்லாட்சி புரிந்து மக்களின் மனதில் நிலைத்து நிற்கக்கூடிய எங்களது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தாயின் மறைவிற்குப் பிறகு தாய் இல்லா பிள்ளைகளாக இருந்த எங்களையும், எங்கள் கழகத்தையும் காத்து நின்று, அதுமட்டுமல்ல, தாயை நம்பி வாக்களித்த, மக்கள் வாக்களித்த இந்த ஆட்சியையும் காத்து நின்று, தமிழகத்தில் ஏற்பட்டிருந்த வெற்றிடத்தை*

நிரப்ப யாரையும் நம்பாமல், தமிழக மக்களை மட்டுமே நாடி, மக்களோடு மக்களாக மக்கள் போற்றும் முதல்வராக (மேசையைத் தட்டும் ஒலி) பீடுநடை போட்டுக் கொண்டிருக்கும் சேலம் தந்த முதல்வர், தமிழக முதல்வர், விவசாயி, டாக்டர் எடப்பாடியார் அவர்களையும் மற்றும் அவருக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய எங்களது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். இந்த இருவர் தலைமையிலும் சிறப்பாக தலைமையேற்று, சிறப்பாக கழகப் பணியாற்ற இன்றும் எனக்கு அறிவுரை வழங்கி, என்னை வழிநடத்துகின்ற என் அண்ணன், கழகத் துணை ஒருங்கிணைப்பாளர், மாநிலங்களவை உறுப்பினர் அண்ணன் ஆர். வைத்திலிங்கம் அவர்களையும் இந்நேரத்தில் மனதில் நிலைநிறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குன்னம் சட்டமன்றத் தொகுதி, அரியலூர் வருவாய் மாவட்டம், செந்துறை வட்ட மக்கள், அறியாமை நிறைந்த மக்கள்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: அந்த வட்டம், குறுகிய கிராமங்களைக் கொண்ட ஒன்றியம். இதற்கு முன்பு அங்கிருக்கக்கூடிய இளைஞர்கள் பள்ளிக் கல்வியோடு தங்களது படிப்பை முடித்த பின்னர், அங்கிருக்கக்கூடிய பல தனியார் சிமென்ட் தொழிற்சாலைகளில் பணியாற்றும் நிலை மாறி, இப்பொழுது படிப்பின்மீது அக்கறை கொண்டு பள்ளிப் படிப்பில் ஆர்வம் காட்டி வருகிறார்கள். குறிப்பாக, பெண்கள் உயர் கல்வியைப் பெறுவதற்கு ஏதுவாக அந்த வட்டாரத்தில் கட்டாயமாக ஓர் அரசு கலைக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக எனது மரியாதைக்குரிய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதியதாக

2020 பிப்ரவரி 20]

கல்லூரி வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். செந்துறை வட்டம் அமைந்திருக்கின்ற அரியலூர் மாவட்டத்தில் ஏற்கெனவே ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், இரண்டு சுயநிதி கல்லூரிகளும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதிலே அரியலூர் மாவட்டத்தில் உள்ள கல்லூரியிலே, 1,025 மாணாக்கர் சேர்க்கைக்கான ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே, 55 இடங்கள் காலியாக இருக்கின்றன. சுயநிதி கல்லூரியிலே 2,130 மாணாக்கர் சேர்வதற்கான இடங்கள் ஒப்பளிக்கப்பட்டதில், 560 இடங்கள் காலியாக இருக்கின்றன. பெண்கள் கல்வி பயில்வதற்காக கல்லூரி வேண்டும்; அதற்கு முக்கியத்துவம் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார். இன்றைக்கு அவர் சார்ந்திருக்கக்கூடிய பெரம்பலூர் மாவட்டம், வேப்பூரிலே பெண்களுக்கென தனியாக ஒரு கல்லூரியைத் தொடங்கியவர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அந்தக் கல்லூரியிலும் 720 இடங்கள் ஒப்பளிக்கப்பட்ட சூழ்நிலையிலே, 608 மாணவிகள் அதில் சேர்ந்திருக்கின்றார்கள். அதில் 112 இடங்கள் காலியாக இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கக்கூடிய பெரம்பலூர் மாவட்டமானது, அரியலூர் மாவட்டத்திற்கு அருகில் இருக்கக்கூடிய சூழ்நிலையிலே, ஏற்கெனவே இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வழங்கப்பட்ட இரண்டு கல்லூரிகளிலும் 1,295 இடங்கள் ஒப்பளிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே, 952 மாணாக்கர் சேர்க்கை நடைபெற்றிருக்கிறது. 343 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆக, ஒட்டுமொத்தமாக அரசு கல்லூரிகளிலே, அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களைப் பார்க்கின்றபொழுது, 510 இடங்கள் காலியாக இருக்கின்றன. 2019–2020 ஆம் கல்வியாண்டிலே, சுயநிதி கல்லூரிகளில் 560 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே, எதிர்வரக்கூடிய காலக்கட்டங்களில் மாணாக்கர்களுடைய சேர்க்கைக்கேற்ப, புதிய கல்லூரியைத் தொடங்குவதற்கு சாத்தியக்கூறு இருப்பின், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

[2020 பிப்ரவரி 20

திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, பெரம்பலூர் மாவட்டத்தில் 3 தனியார் கல்லூரிகளும் மற்றும் பெரம்பலூரில் ஓர் அரசு இருபாலர் கல்லூரியும் அமைந்திருந்தபோதிலும், 2011–2016 ஆம் ஆண்டு வரையிலான இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், நான் இப்பொழுது சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய குன்னம் சட்டமன்றத் தொகுதியில், திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் இருந்தபோதும்கூட, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குன்னம் தொகுதி, வேப்பூரில் கட்சி பாகுபாடின்றி அந்த மக்களை நேசித்து, அந்தப் பகுதிக்கு மகளிர் கல்லூரியை வழங்கினார்கள்.

அதுமட்டுமல்ல, பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டாரத்திற்கு ஓர் அரசுக் கல்லூரியும், பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டாரத்திற்கு ஓர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் வழங்கினார்கள். இப்படி, பெரம்பலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய 4 வட்டங்களுக்கும் கல்லூரிகளை வழங்கி, பெரம்பலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய அத்தனை மாணவ, மாணவியரும் உயர் கல்வி பெறுகின்ற வாய்ப்பினை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கினார்கள். அதே எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, வாரி வழங்கிய நமது ஆட்சியில், உங்கள் வீட்டுப் பிள்ளையாக, குன்னம் சட்டமன்ற உறுப்பினரான நான் கேட்கிறேன், அம்மா அவர்கள் எப்படி ஒரு மாவட்டத்தின் அருகில் இருக்கக்கூடிய அத்தனை வட்டங்களுக்கும் கல்லூரியை அமைத்துக் கொடுத்தார்களோ, அதேபோன்று, சிறப்பினமாக, அரியலூர் மாவட்டம், செந்துறையில் இருக்கக்கூடிய ஏழையெளிய மாணவர்கள் பயனடைகிற வகையில் ஓர் அரசுக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நானும் கோரிக்கை வைக்கின்றேன். அருமை அண்ணன் அவர்களிடம் மீண்டும் கேட்கின்றேன், செந்துறைக்கு ஏதேனும் ஓர் அரசுக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு விடைபெறுகிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2020 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல 2011–ல் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகம் முழுவதும் எங்கெங்கே மாணவர்களின் சேர்க்கை அதிகமாக இருக்கின்றது என்பதைக் கணக்கெடுத்து, உயர் கல்வித் துறையின்கீழ் 4 பொறியியல் கல்லூரிகள், 21 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 57 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் என ஏற்படுத்திக் கொடுத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் நல்லாட்சி செய்யக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் சேர்ந்து 82 புதிய கல்லூரிகளைத் தோற்றுவித்ததோடு மட்டுமல்லாமல் தேவையான கல்லூரிகளில் புதிய புதிய பாடப் பிரிவுகளையும் மாணவர்களுடைய தேவைக்கு ஏற்றாற்போல் ஆங்காங்கே வழங்கினார்கள். அந்த வகையில் அரியலூர் மாவட்டத்தில்கூட இளநிலை படிப்பிற்காக 4 புதிய பாடப் பிரிவுகள், முதுநிலை படிப்பிற்காக 5 புதிய பாடப் பிரிவுகள், M.Phil.–க்காக 5 புதிய பாடப் பிரிவுகள், Ph.D.–க்கு 7 புதிய பாடப் பிரிவுகள் என்று வழங்கிய பெருமை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசைச் சாரும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மேலும், அரியலூர் மாவட்டத்தில் மாணாக்கர்களுடைய சேர்க்கை அதிகமாக இருக்கின்றது. ஆகவே அங்கே ஒரு புதிய அரசுக் கல்லூரி தொடங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கின்றார். அரியலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய அந்த அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்கூட ஒப்பளிக்கப்பட்ட இடங்களில் 55 இடங்கள் மட்டும்தான் காலியாக உள்ளன. ஆகவே, வரக்கூடிய கல்வி ஆண்டில் அந்தப் பகுதியினுடைய மாணாக்கர்களின் விண்ணப்பத்திற்கேற்ப அரியலூர் மாவட்டத்தில் புதியதாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்குவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் பார்வைக்கு எடுத்துச்சென்று தேவைக்கேற்ப அரசானது பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

[2020 பிப்ரவரி 20

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, அரசு கலைக் கல்லூரிகளில் பணிபுரியும் கௌரவ விரிவுரையாளர்கள் சுமார் 4,000 பேர் தொகுப்பூதியம் 15,000 ரூபாய் பெற்று பணிபுரிகின்றனர். அதுவும் குறிப்பாக ஓராண்டில் 11 மாதங்கள்தான் அவர்களுக்கு பணி கொடுக்கப்படுகின்றது. பல்கலைக்கழக மானியக் குழு 50,000 ரூபாய் மாதச் சம்பளம் கொடுக்கலாம் என்று ஏற்கெனவே ஆணை பிறப்பித்திருக்கின்றது. அந்த ஆணையை ஏற்று ஹரியானா, பஞ்சாப் போன்ற மாநிலங்களில் 'சம வேலைக்கு சம ஊதியம்' என்ற அடிப்படையில் 57,700 ரூபாய் மாதச் சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. பாண்டிச்சேரியிலும், கேரளாவிலும்கூட 50,000 ரூபாய் சம்பளம் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் சட்டக் கல்லூரிகளிலும்கூட 50,000 ரூபாய் சம்பளம் வழங்கப்படுகிறது. உங்கள் கட்டுப்பாட்டில் இயங்குகின்ற அண்ணா பல்கலைக்கழகத்தில்கூட விரிவுரையாளர்களுக்கு 25,000 ரூபாய் சம்பளம் வழங்கப்படுகிறது. அரசுக் கலைக் கல்லூரிகளில் பணிபுரிகின்ற கௌரவ விரிவுரையாளர்களுக்கு 15,000 ரூபாய் சம்பளம் கொடுக்கின்ற இந்தச் சூழ்நிலையில், பொருளாதாரம் மற்றும் குடும்பச் சூழ்நிலை காரணமாக அது போதுமானதாக இல்லை என்பது அவர்கள் மத்தியில் ஒரு குறையாக இருக்கின்றது. ஆசிரியர்கள் நல்ல மன நிலையில் இருந்தால்தான் நல்ல கல்வியை மாணவர்களுக்குத் தர முடியும். கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் அவர்களுடைய தகுதியின் அடிப்படையில் விரிவுரையாளர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்கள், சம்பளம் வழங்கப்படும் என்று நீங்களே குறிப்பிட்டிருக்கின்றீர்கள். அவர்களுக்கு எப்போது சம்பளம் கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகின்றேன். பல நேரங்களில் சட்டமன்றத்தில் நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது கல்வியில் இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழகம்தான் முதன்மை மாநிலமாக இருக்கிறது என்று அடிக்கடி சொல்கின்றீர்கள். ஆனால், அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாவதற்கு ஆசிரியப் பெருமக்கள்தான் உறுதுணையாக இருக்கின்றார்கள். எனவே, இந்த 4,000 கௌரவ விரிவுரையாளர்களை எப்போது நிரந்தரம் செய்யப் போகின்றீர்கள், அவர்களுக்கு எப்போது 50,000 ரூபாய் சம்பளம் கொடுக்கப்போகின்றீர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.*

2020 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியில் தமிழகத்தில் நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இன்றைக்கு* TRB *மூலமாக 2,331 ஆசிரியர்களைத் தேர்வு செய்வதற்காக அனுமதி தந்து இன்றைக்கு அதற்கு விண்ணப்பம் பெறப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கௌரவ விரிவுரையாளர்களுக்கு கூடுதலாகச் சம்பளம் வழங்க வேண்டும் என்று கேட்கின்றார்கள். ஆகவே, நிரந்தர பணி நியமனம் செய்வதற்கான உத்தரவினை பிறப்பித்ததன் அடிப்படையில், அதனை கூடிய விரைவில் நிறைவேற்றுகின்ற வகையில், அதனைத் தேர்வாணையம் மூலமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கு மேலாக கௌரவ விரிவுரையாளர்களுக்காக தனியாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். அதற்காக இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச்சென்றவுடன், அவர்களுக்கும் இன்றைக்கு நிரந்தரப் பணி வழங்குவதற்கான வாய்ப்பை உருவாக்குகின்ற வகையிலே அதற்கும் அனுமதி தந்து, அது உயர் கல்வித் துறையின் பரிசீலனையில் உள்ளது என்பதையும் இந்த நேரத்தில் அவருக்கு சுட்டிக்காட்டி எதிர்வரும் காலக்கட்டங்களிலே அவருடைய கோரிக்கைகளை அரசானது பரிசீலனை செய்யும் என்பதையும் தெரிவித்து அமர்கின்றேன்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 3 ஆண்டுகளாக நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் காரைக்குடியில் அரசு கலைக் கல்லூரி ஒன்று வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறேன். ஆனால் என்ன காரணத்தினாலோ அது எங்களுக்கு கிடைக்கவில்லை. ஒவ்வோர் ஆண்டும் அவர்கள் சொல்கின்ற பதில், இந்த ஆண்டு 20 சதவிகிதம் மாணவர்களை அதிகமாக*

சேர்த்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். தொடர்ந்து 3 ஆண்டுகளாக அதிகமாகச் சேர்த்து வருகிறார்கள். அந்த நகரத்தை ஒரு கல்வி நகரம் என்று சொல்லலாம். எல்லாவிதமான கல்வி அமைப்புகளும் இருக்கின்றன; இன்னும் தேவைப்படுகிறது. அங்கே கிராமங்களில் இருக்கக்கூடிய ஏழையெளிய மாணவர்களுக்கு வேறு வழியே கிடையாது. Private college–க்குப் போனால் என்னவாகும் என்பது உங்களுக்கே தெரியும். என்னைவிட உங்களுக்குத்தான் அதிகமாகத் தெரியும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, நாங்கள் வேறுபாடு காட்டுவதில்லை என்று சொன்னார்கள். என்ன காரணத்தினாலோ, எங்களுக்கு புதியதாக கல்லூரியை அமைப்பதற்கு நீங்கள் உறுதுணையாக இல்லை என்பதை நான் சொல்வதைத் தவிர வேறு வழியே கிடையாது, நான் வருத்தப்படுகிறேன். கூடியவிரைவில் அங்கே ஒரு புதிய கல்லூரியைத் திறப்பதற்கு நீங்கள் உதவியாக இருப்பீர்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற இடத்திலே, இன்றைக்கு காரைக்குடி–சிவகங்கை மாவட்டத்திற்குட்பட்ட பகுதியிலே, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் நான்கும், அரசு உதவி பெறும் கல்லூரிகள் நான்கும், அதேபோல் தனியார் கல்லூரிகள் பதினான்கும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதற்கு மேற்கொண்டு அவர் சார்ந்திருக்கக்கூடிய காரைக்குடியில், அரசுக் கல்லூரி ஒன்றும், அரசு உதவி பெறுகின்ற கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பொறியியல் கல்லூரி ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கு அவருடைய சட்டமன்றத் தொகுதியிலே எந்தவிதமான இடையூறும் இல்லை. அவர் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கின்றார். அதிகப்படியான விண்ணப்பங்கள் வருகின்றன என்பதை என்னிடம் சுட்டிக்காட்டினார். ஆகவேதான் அதிகப்படியான விண்ணப்பங்கள் வருகின்றபோது, அரசுக் கல்லூரிகளிலே 20 சதவிகிதம் மாணாக்கர்களை

2020 பிப்ரவரி 20]

கூடுதலாக சேர்ப்பதற்கான வாய்ப்பை அரசு உருவாக்கித் தந்துள்ளது. அதோடு மட்டுமல்லாமல், அரசு உதவி பெறக்கூடிய கல்லூரிகளிலே 15 சதவிகித இட ஒதுக்கீட்டை சேர்த்து வழங்கி, அதற்குண்டான வாய்ப்பையும் உருவாக்கித் தந்தது. சுயநிதிக் கல்லூரிகளில் 10 சதவிகித இட ஒதுக்கீட்டைத் தந்து மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்குண்டான வாய்ப்பினை இந்த அரசானது சரியான முறையில் உருவாக்கித் தந்திருக்கிறது. அவருடைய சட்டமன்றத் தொகுதியில் கூடுதலாக மேலும் ஒரு கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார். ஆகையால், இன்றைக்கு எந்தெந்தப் பகுதிகளில் கூடுதலாகக் கல்லூரிகள் வேண்டுமோ, அங்கே அரசானது புதிய பாடப் பிரிவுகளைக் கொடுத்தால், அங்கே மாணவர் சேர்க்கைக்கு சரியாக இருக்கும். அதற்கடுத்தகட்டமாக, 20 சதவிகித இட ஒதுக்கீட்டை சேர்த்துத் தருகின்றபோது எங்கெங்கெல்லாம் மாணவர் சேர்க்கை சரியாக இருக்கிறது என்பதை ஆய்வு செய்து, அனைவரும் இன்றைக்கு உயர் கல்வி படிக்கின்ற வாய்ப்பை உருவாக்கித் தருகிற அரசாக அம்மாவினுடைய அரசு திகழ்ந்த காரணத்தினால் Gross Enrollment Ratio*–ல், நான் சுட்டிக்காட்டியது, நாங்கள் சொன்ன புள்ளிவிவரம் அல்ல;* MHRD*–யிலிருந்து சொல்கின்ற புள்ளிவிவரம், இந்தியாவிலேயே பெரிய மாநிலங்களைவிட தமிழகம்தான் இன்றைக்கு முதன்மை இடத்தைப் பெற்று, 49 சதவிகிதம் மாணாக்கர்கள் சேர்க்கை நடைபெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சுட்டிக்காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அவர் சுட்டிக்காட்டிய பகுதியிலே கூடுதலாக ஒரு கல்லூரி வேண்டுமென்று கேட்கின்றபோதுதான், அரசானது பரிசீலனை செய்யும் என்று இரண்டாண்டு காலமாகச் சொல்லியிருந்தேன். ஆகவே, எந்தெந்தப் பகுதியில் அவசியம் தேவை என்று எழுகிறதோ, அந்தப் பகுதியில் கூடுதலாகக் கல்லூரியை வழங்கிய காரணத்தினால்தான் இன்றைக்கு 2011–க்குப் பின்பாக உயர் கல்வித் துறையின்கீழ் இந்திய வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு 82 கல்லூரிகளை வழங்கிய பெருமை மாண்புமிகு அம்மாவினுடைய அரசைச் சாரும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.*

[2020 பிப்ரவரி 20

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் சிறந்த மாநிலமாக தமிழகம் தேர்வு செய்யப்பட்டு, சிறந்த நிருவாகத் திறமைமிக்க முதலமைச்சராக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்வு செய்யப்பட்டு, எல்லா மாநிலங்களுக்கும் வழிகாட்டுகிற மாநிலமாக தமிழகம் விளங்கிக்கொண்டிருக்கிற இந்த நல்ல நேரத்தில், உயர் கல்வித் துறையிலும் சிறந்த நிருவாகத்துடன் சிறந்து விளங்குகிற மாநிலம், தமிழகம் என்ற நற்பெயரைப் பெற்றிருக்கிறது. பொள்ளாச்சி வட்டம், நெகமம் பேரூராட்சியில் ஒரு மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. அந்த மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தேவையான அளவிற்கு கட்டட வசதியும், இட வசதியும் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் வரும் ஆண்டில் அங்கே ஒரு* polytechnic *கல்லூரியை அமைத்துக் கொடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற பகுதியிலே ஏற்கெனவே ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாகத் தொடங்கப்பட்டு, அது தற்போது அரசு கலைக் கல்லூரியாக மாற்றப்பட்டு, அக்கல்லூரியில் மாணாக்கர்கள் சேர்க்கை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் தனியாகக் கட்டடம் வழங்கப்பட்டு, தற்போது அந்தக் கல்லூரி சிறந்த முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மேலும், அதே பகுதியில் ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அந்தப் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அங்கே அவசியம் தேவையா என்பதைக் கருத்தில்கொண்டு அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சண்முகையா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*